No. of Printed Pages : 6

4005510 **6661**

பதிவு எண் | 0 | 1 | 5 | 0 | 1 | 8 |

**MARCH 2017**

# பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

**(உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)**

# Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பென்சில் பயன்படுத்தவும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளின்** மிகாது விடை எழுதவும். **3x4=12**

1. தமிழ் உயர்மொழி, தனிமொழி என உரைக்கப்படக் காரணங்கள் யாவை ?

2. சாதிக் கொடுமை, சமயவெறி முதலியன சமரச உணர்வைக் குலைப்பனவாம் இக்கருத்தைத் திரு.வி.க. வழிநின்று ஆய்க.

3. கீட்ஸ், ஜான்ரஸ்கின், பவணந்தி முனிவர் ஆகியோர் கூறும் கவிதையின் இயல்புகள் யாவை ?

4. ஈகைப் பண்பில் தமிழ் மக்கள் சிறந்து விளங்கிய தன்மையை விளக்குக.

5. நமது நாட்டில் நீண்ட காலமாக நிகழ்ந்து வரும் பெருங்கொலை என்று திரு.வி.க. வருந்தி உரைப்பனவற்றை எழுதுக.

[ திருப்புக

**II.** பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளின்** மிகாது விடை எழுதவும். **3x4=12**

6. அறுமுறை வாழ்த்து - விளக்குக.

7. கவிதையின் நோக்கம் குறித்து ஆசிரியர் சிதம்பரநாதர் கூறுவன யாவை ?

8. மாடு என்பது செல்வம் போலக் கருதப்படக் காரணங்கள் யாவை ?

9. முன்னேற்றம் என்பது பற்றி மு.வ. உரைப்பன யாவை ?

10. தமிழகக் குடைவரைக் கோவில்களைப் பற்றி எழுதுக.

**III.** பின்வரும் வினாக்களுள் **ஏதேனும் ஒன்றனுக்கு** மட்டும் **இருபது வரிகளின் மிகாது** விடை எழுதவும். **1x6=6**

11. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் வகைமை குறித்துப் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து எழுதுக.

12. தேர்தல் முறைகள் பற்றி மு.வ. எடுத்துரைக்கும் கருத்துகள் யாவை ?

**IV.** பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் **இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்** விடை எழுதவும். **2x10=20**

13. 'மூக்கப் பிள்ளை வீட்டு விருந்து' அல்லது 'மகன்' என்னும் சிறுகதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

அல்லது

'வேலி' அல்லது 'பால் வண்ணம் பிள்ளை' என்னும் சிறுகதையில் இடம் பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. 'மண்' அல்லது 'ஒவ்வொரு கல்லாய்' என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதை மாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

அல்லது

நேர்மை தவறாத மாணிக்கம் அந்தப் பண்பில் தவறாது வாழ்க்கையில் பாடுபட்டு உயர்ந்ததாக ஒரு கதை எழுதுக.

**அல்லது**

கிட்டு தன் தமையன் தனக்குச் செய்த உதவிகளை நினைத்து மகிழ்வது போல ஒரு கதை எழுதுக.

**V. 15.** பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச் சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. **1x10=10**

விண்ணிடையே இரதம் ஊர்ந்து
மேதினி கலக்கு தற்கும்
பண்ணிடைத் தமிழைச் சேர்த்துப்
பாரிடை மயக்கு தற்கும்
மண்ணிடை வாளை ஏந்திப்
பகைப்புலம் மாய்ப்ப தற்கும்
எண்ணிலாத் தமிழர் உள்ளார்
எனும்நிலை காண்ப தென்றோ?

கண்களும் ஒளியும் போலக்
கவின்மலர் வாசம் போலப்
பெண்களும் ஆண்கள் தாமும்
பெருந்தமிழ் நாடு தன்னில்
தண்கடல் நிகர்த்த அன்பால்
சமானத்தர் ஆனார் என்ற
பண்வந்து காதிற் பாயப்
பருகுநாள் எந்த நாளோ ?

- பாவேந்தர் பாரதிதாசன்.

[ திருப்புக

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் **VI** மற்றும் **VII** வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன.

**VI.** பின்வரும் தொடர்களில் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் தமிழாக்கம் தருக. **3x2=6**

**16.** Blood is thicker than water.

**17.** A friend in need is friend indeed.

**18.** Diamond cuts Diamond.

**19.** Many thanks for your kind message of greetings.

**20.** Writing essay is an art.

**21.** Education should develop and promote good values.

**VII. 22.** பின்வரும் பழமொழிகளுள் **ஒன்றினை** விளக்கும் வகையில் வாழ்க்கை நிகழ்வில் அமைத்து **பத்து வரிகளில்** எழுதவும். **1x4=4**

(அ) பதறிய காரியம் சிதறும்

(ஆ) வாய்மையே வெல்லும்

(இ) தன்கையே தனக்குதவி

**அல்லது**

**'நட்பு'** அல்லது **'இயற்கை அழகு'** என்னும் தலைப்பில் சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றினை **எட்டு** அடிகளுக்குக் குறையாது **பத்து** அடிகளுக்கு மிகாது எழுதுக.

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. **VI** மற்றும் **VII** -ல் உள்ள வினாக்களுக்குப் பதிலாக காது கேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் **16** முதல் **22** வரை உள்ளவற்றில் **எவையேனும் ஐந்தனுக்கு** மட்டும் ஏற்ற விடையை எழுதுக. **5x2=10**

இந்திய விண்வெளிப் பாதுகாப்புத்துறையின் தந்தை என்று போற்றப்படும் டாக்டர் அப்துல்கலாம் அவர்கள் இந்தியாவின் உயர்ந்த விருதான 'பாரத ரத்னா' விருதைப் பெற்ற இரண்டாவது தமிழ் விஞ்ஞானி. இவர் தனது வாழ்க்கையை ஆராய்ச்சிக்காகவே அர்ப்பணித்துக் கொண்டவர். இவர் இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரத்தில் 15.10.1932 -இல் பிறந்தார். இவரது முழுப் பெயர் அபுல் பக்கீர் ஜைனுலாப்தீன் அப்துல்கலாம்.

சிறுவயதிலேயே எதையும் கூர்ந்து நோக்கும் திறம் பெற்றிருந்தார். இவரது பெற்றோர் அந்தக் காலத்தில் இவர் விளையாட இரயில், ஆகாய விமானம் போன்ற பொம்மைகளை வாங்கித் தந்தால் அவற்றை உருட்டி விளையாடுவதற்குப் பதிலாக பொம்மைகளைத் தனித்தனியாகப் பிரித்துவிட்டு அவற்றை மறுபடியும் இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பார். இத்தகைய முயற்சிகள் இவரை அறிவியல் துறையில், அதிக ஈடுபாடுள்ளவராக மாற்றின. அப்துல்கலாம் சிறுவனாக இருந்தபோது ஒரு நாள் ஒரு பத்திரிகையில் வெளியான புதுமையான அறிவியல் செய்தி அவரது மனதைக் கவரவே அது பற்றிய ஆராய்ச்சியில் அப்போதே ஈடுபடத் தொடங்கினார்.

குழந்தைப் பருவத்திலேயே அறிவியல் துறையில் அதிக ஈடுபாடு காட்டிய அப்துல்கலாம், திருச்சியில் தனது ஆரம்பகாலப் படிப்பைத் தொடங்கி, சென்னை எம்.ஐ.டி. தொழில் நுட்பக் கல்லூரியில் தனது பட்டப்படிப்பை முடித்தார். 1963 -இல் ஐ.எஸ்.ஆர்.ஓ. என்ற பாதுகாப்புத் துறையில் சேர்ந்து பணியாற்றினார். இந்தக் கால கட்டத்தில்தான் 'ரோகிணி' என்ற செயற்கைக் கோளை ஏவுவதற்காக எஸ்.எல்.வி - 3 என்ற ராக்கெட்டை வடிவமைப்பதில் பெரும் பங்காற்றினார்.

**வினாக்கள் :**

16. அப்துல்கலாம் எவ்வாறு போற்றப்பட்டார் ?

17. சிறுவனாக இருந்த போது அவரது மனதைக் கவர்ந்த நிகழ்ச்சி எது ?

18. கலாம் அவர்களின் முழுப் பெயர் என்ன ?

19. எத்தகைய முயற்சி இவரை அறிவியல் துறையில் ஈடுபடுத்தியது ?

20. இவர் தனது பட்டப்படிப்பை எந்தக் கல்லூரியில் முடித்தார் ?

21. 'ரோகிணி' என்ற செயற்கைக் கோளை ஏவியவர் யார் ?

22. இவர் பணியாற்றிய நிறுவனத்தின் பெயர் யாது ?

**VIII.** பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக. **10x1=10**

**23.** இங்குள்ளது எல்லாம் நல்ல பழமே.
(வாக்கியப் பிழையை நீக்குக)

**24.** நீதான் என் அத்தியந்த ஸ்னேகிதன்.
(வட மொழிச் சொற்களை நீக்கி நல்ல தமிழில் எழுதுக)

**25.** கொத்தி திரியும் அந்த கோழி.
(தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக)

**26.** அப்பிசி மாசம் அடமள இம்பாங்க.
(கொச்சைச் சொற்களைத் திருத்துக)

**27.** இலை, இழை (அல்லது) ஒலி, ஒளி.
(பொருள் வேறுபாடறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக)

**28.** 'வாழ்கத் தமிழ்' என்று அவனாச் சொன்னான். அறிந்துச் சொல் எனக்கு.
(தேவையற்ற வல்லின மெய்யை நீக்கி எழுதுக)

**29.** டயாபெட்டிக் பேஷண்ட் ஸ்வீட் சாப்பிடுவதை ஸ்டாப் செய்ய வேண்டும்.
(ஆங்கிலச் சொல்லை நீக்கி இனிய தமிழில் எழுதுக)

**30.** காகம் கூவும், நாய் கத்தும்.
(மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக)

**31.** சாறைப் பாம்பு குறுவிக் கூட்டில் நுழைந்தது.
(எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக)

**32.** கீட்ஸ் கால்வாய் இல்லாத இடத்தில் பெய்த ஒளி மழையே கவிதை என்றார்
(பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டு எழுதுக)

-oOo-